பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 23 புதன்கிழமை 05.06.2024 கதிர் 210

# மின்சாரச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரண்

## நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை வேண்டும் உயர் நீதிமன்றம் நாடாளுமன்றுக்கு அறிவிப்பு

**நாளையதினம்விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள இலங்கை மின்சார சட்டமூலம், நியாயமான அடிப்படை உரிமையை மீறும் வகையில் உள்ளதால், அரசமைப்பிற்கு ஏற்றவகையில்நிறைவேற்றப்பட வேண்டுமாயின், பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைஅவசியம்** ☞ 2

### இது ரகசியம் அல்ல!

உலகின் பெரும் ஜனநாயகத் திருவிழாக்களில் ஒன்று என்று வர்ணிக்கப்படும் இந்திய பொதுத் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின. ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிஎதிர்பார்த்தபெரும்வெற்றியைப் பதிவு செய்யவில்லை என்றாலும் அந்தக் கூட்டணியே அதிகளவு ஆசனங்களைக்கைப்பற்றியுள்ளது. ஆளும்பாரதீயஜனதாக்கட்சிதனித்து ஆட்சி அமைப்பதற்கான பெரும் பான்மைப்பலத்தைப்பெறவில்லை என்பதால் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன்தான் மூன்றாவது தடவையாகவும் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்கிற நிலைதான் இப்போதைக்கு இருக்கின்றது. பா.ஜ.க. கூட்டணியில் உள்ள அதே கட்சிகளைத் தம் வசப்படுத்தி ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியில் காங்கிரஸ் தலைமையிலான 'இண்டியா' கூட்டணியும் முன்முரமாக இருக்கின்றது. அதனால் பா.ஜ.க. மூன்றாவதுதடவையாகவும் இந்திய ஆட்சியைப் பிடிக்கும் என்பது கேள்விக்குறியாகவே ☞ 2

## சமையல் எரிவாயு விலைக் குறைப்பு

நேற்று நள்ளிரவு முதல் லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்படவுள்ளது.

12.5கிலோகிராம்சிலிண்டரின்விலை 160 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதாக லாப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 65 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளது.

இதேவேளை, நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லிற்றோ சமையல் எரிவாயுவின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய 12.5 கிலோ கிராம் லிற்றோசமையல்எரிவாயுவின்விலை 150ரூபாவினால்குறைக்கப்படவுள்ளதாக லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

5 கிலோகிராம் சமையல் ☞ 8

கடன் மறுசிரமைப்பு

## ரணிலின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். ☞ 8

## அரசமைப்பு அலுவல்கள் குழுவுக்கு உறுப்பினர்கள்

அரசமைப்புஅலுவல்கள் பற்றியகுழுவுக்குபுதியஉறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் நாடாளுமன்றம்நேற்றுக்கூடியபோது சபாநாயகர் மஹிந்த யாப்பா விடுத்துள்ள அறிவிப்பில் நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 126 (1) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக தவிசாளராகச் சபாநாயகரையும், நாடாளுமன்ற சபை முதல்வர், பிரதமர், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருடன்சமல்ராஜபக்ச, கயந்தகருணாதிலக்கமற்றும் எம்.ஏ.சுமந்திரன்ஆகியோரும் சபாநாயகரினால் பெயர் குறித்துநியமிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

## பர்தா அணிந்ததற்காக ஏ.எல். பரீட்சை பெறுபேற்றை நிறுத்துவது நியாயமா?

### நாடாளுமன்றில் ரிஷாட் எம்.பி. கேள்வி

முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவதை பிழையாகக் கருதி, பரீட்சை பெறுபேறுகளை இடைநிறுத்தி வைப்பது, எந்த வகையில்நியாயம்? என்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானரிஷாட்பதியுதீன் நாடாளுமன்றத்தில்வேண்டுகோள் விடுத்தார்.

திருகோணமலை சாஹிரா கல்லூரிமாணவிகளின்உயர்தரப் பெறுபேறுகளை உடனடியாக வெளியிடுமாறுஜனாதிபதிமற்றும் கல்வி அமைச்சரிடம் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

பெண்களின் உரிமைகள் மற்றும் வலுவூட்டல் தொடர்பான சட்டமூலத்தை கொண்டுவந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இதற்காக உழைத்த நாடாளுமன்றஉறுப்பினர்களான வைத்திய கலாநிதி சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, தலதா அத்துகோரள, ரோகிணிகவிரத்ன, கீதா குமாரசிங்க ஆகியோருக்கு நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்தநாட்டின்பிரதமராகமற்றும் மற்றும் ஜனாதிபதியாக பெண்கள் இருந்திருக்கின்றனர். ☞ 2

## சட்டவிரோதக் கட்டுமானங்களை கொலன்னாவவில் அகற்ற அனுமதி

### அமைச்சரவை வழங்கியது

கொலன்னாவை பிரதேசசெயலக பிரிவில் வெள்ளம் ஏற்படுவதற்கு காரணமாகவுள்ள சட்டவிரோதகட்டுமானங்களை அகற்றுவதற்கு அமைச்சரவைஅனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், காணிகளை நிரப்பும் நடவடிக்கைகளை நிறுத்துதல், பிரதேசத்தில் வடிகாலமைப்பு தொகுதியை தூய்மையாக்குதல் உள்ளிட்ட ஏனைய அனைத்து படிமுறைகளையும் மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பலத்த மழைவீழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட கொலன்னாவைபகுதிக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதேச மக்கள் முன்வைத்த ☞ 2

## பா.ஜ.க. வெற்றிக்கு ஜனாதிபதி பாராட்டு

பாரதிய ஜனதா கட்சிதலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

'பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் முன்னேற்றம் மற்றும் செழிப்பு ஆகியவற்றில் இந்திய மக்களின் ☞ 2

## மோடிக்கு உடனடியாக ரெலோ தலைவர் வாழ்த்து

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றி பெற்றதற்கு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உடனடியாக வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய நாட்டின் நடந்து முடிந்த நாடாளுமன்றத் ☞ 2

## வெள்ள நிவாரண நிதி போதாது எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

வெள்ள நிவாரண நிதி போதாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை விசேட கூற்றொன்றைமுன்வைத்து குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாகஅவர் மேலும்தெரிவித்ததாவது:

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகளைமேற்கொண்டுவரும் பொலிஸ் அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினர் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் குறுகிய காலத்துக்குள் இந்த நிவாரண நடவடிக்கைகளை வழங்க எடுத்துவரும் முயற்சிக்குஎமதுநன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அனர்த்தம் காரணமாக அதிகமானவர்களுக்கு உணவு, ☞ 8

## மூன்று வழக்குகள் தாக்கல்

'பொருளாதார நிலைமாற்றம்' எனும் சட்டமூலம், இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தம்)' எனும் சட்டமூலம் ஆகியவற்றுக்குஎதிராக மனுக்கள் கிடைத்துள்ளதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

அரசியலமைப்பின் 121(1)ஆம்உறுப்புரையின் பிரகாரம் 'இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு 2024.05.22ஆம்திகதி சமர்ப்பிக்கப்பட்டமூன்று மனுக்களின்பிரதிகளும், 2024.05.27ஆம்திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதியும் மற்றும் 2024.05.28 ஆம்திகதிசமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதியும் தனக்குக் கிடைத்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'பொருளாதார நிலைமாற்றம்' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து மனுக்களின் ☞ 8

## தமிழ் பொது வேட்பாளருக்கு புளொட்டும் முழு ஆதரவு

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குப் புளொட் ஆதரவு வழங்கியுள்ளது. புளொட்தலைவர் த.சித்தார்த்தன் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்தில்தமிழ்ப்பொது வேட்பாளர் சம்பந்தமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும், சமூக வாழ்வின் எதிர்பார்ப்புகளையும், நாளாந்தம் முகம் கொடுத்துவரும் நெருக்கடிகளையும், தென்னிலங்கை அரசியல் சமூகத்தின் தொடர்ச்சியான ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

தொடர்கின்றது.

இந்தியநாடாளுமன்றத்திற்கான 543 ஆசனங்களுக்கு 7 கட்டங்களாகத் தேர்தல் நடத்தப்பட்டது. சூரத் தொகுதியில் பாஜக வேட்பாளர் போட்டியின்றி வெற்றிபெற்றநிலையில்மீதமிருந்த 542 தொகுதிகளுக்குமான வாக்கு எண்ணிக்கை நேற்றுத் தொடங்கியது. ஆட்சி அமைக்க 272 ஆசனங்களை வென்றால் போதுமானது என்கிற நிலையில் பாஜக கூட்டணி 291ஆசனங்களை வென்றுள்ளது. அதில் பாஜக தனித்து 240 இடங்களைக் கைப்பற்றித் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றுள்ளது.

இருந்தாலும், தனித்து ஆட்சி அமைப்பதற்குபாஜகவுக்குஇன்னும் 32 ஆசனங்கள் தேவை என்பதால் அது கூட்டணிக் கட்சிகளின் தயவில் தங்கியிருக்கவேண்டியிருக்கிறது. தெலுங்கு தேசம் மற்றும் ஐக்கிய ஜனதா தளம் ஆகிய இரு கட்சிகளும் தேர்தலில் பாஜகவுடன் கூட்டுச் சேர்ந்திருந்தனஎன்றாலும்இப்போது இண்டியா கூட்டணியுடனும் ஆட்சியமைப்பதற்கான பேரங்கள் குறித்துப் பேசிவருகின்றன. தமக்கு ஆதவளித்தால் துணைப் பிரதமர் பதவி தரலாம் என்று அவர்களுக்கு இண்டியா கூட்டணி ஆசை காட்டி வருகின்றது. பேரம் பலிக்குமா என்பது இன்னும் ஓரிரு நாட்களில் தெரிந்துவிடும்.

இலங்கைத் தமிழ்க் கட்சி களைப் போன்று ஒற்றுமை ஒற்றுமை என்று பேசி மக்களை ஏமாற்றுவதில்லை இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள். அவை தேர்தலுக்காக மட்டுமே கூட்டணி அமைக்கின்றன. தேர்தல்வாக்களிப்பு முடிந்ததும் கூட்டணியின் ஆயுளும் முடிந்துவிடும். அதன் பின்னர் நீ யாரோ நான் யாரோ கதைதான். அதனால்தான் தெலுங்கு தேசம் சந்திரபாபு நாயுடுவாலும் ஐக்கிய ஜனதா தளத்தின் நிதிஷ் குமாராலும் ஆட்சிக்கான பேரத்தை பாஜகவுடனும் இண்டியா கூட்டணியுடனும் சமநேரத்தில் நடத்த முடிகிறது. அங்குள்ள கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் மக்களுக்காக ஒற்றுமைப்படுகின்றோம் என்று கூறி கட்சிகளின் நலன்களுக்காக மக்களை ஏமாற்றுவது கிடையாது.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் தனித்து 99 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அதன் இண்டியா கூட்டணி 234 இடங்களைக் கைப்பற்றி இருக்கின்றது. எனினும் ஆட்சி அமைக்க இன்னும் 37 ஆசனங்கள் தேவை. அதற்காகத்தான் தெலுங்கு தேசம் கட்சியுடனும் ஐக்கிய ஜனதா தளத்துடனும் நடத்தி வருகின்றது.

தேர்தலின்போது பாஜக 400 என்ற கனவுடன் களமாடியது. அதில் அந்தக் கட்சி தன்னம்பிக்கையுடன் இருந்தது. மிகப்பெரும்வெற்றியுடன் மூன்றாவதுதடவையாகஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற பாஜகவின் அசைக்கமுடியாத நம்பிக்கையி னால் இண்டியா கூட்டணியே ஆடிப் போய் இருந்தது. 400 கிடைக்காவிட்டாலும்கூட குறைந் தபட்சம் 350 ஆசனங்களுக்கு அதிகமாக வென்று மூன்றிலிரண்டு பெரம்பான்மையைக் கைப்பற்றக் கூடும் என்கிற நியாயமான அச்சம் நிலவியது. ஆனால் தேர்தல் முடிவுகள் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டுவிட்டன.

மக்கள் மனங்களை இலகுவில் எடைபோட்டுவிடமுடியாதுஎன்பதற்கு இந்தியத் தேர்தல் மீண்டும் ஒரு உதாரணம். விரைவில் இலங்கையில் நடக்க இருக்கும் தேர்தலிலும் மக்கள் என்ன முடிவெடுப்பார்கள்என்பதுஇப்போதே திகிலைக் கிளப்பும் அனுபவமாக இருக்கிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மின்சாரச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த திருத்தங்களை நிறைவேற்றினால், தனிப்பெரும்பான்மையுடன் குறித்த வரைபை நிறைவேற்றுவதில் எவ்விதத் தடையும் இருக்காது என சபாநாயகர் நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நாளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள குறித்த சட்ட மூலத்தின்மூலம்மின்சாரசபையை பிரித்துநிறுவப்படும்நிறுவனங்களை தனியார் நிறுவனங்களாகக் கொண்டு நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் பரிந்து ரைகளுக்கு அமைய, அதற்கு இடமளிக்கப்படமாட்டாதுஎன்பதுடன், 51சதவீத அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள்திறைசேரியின்செயலாளர் வசம் இருக்க வேண்டும்.

இலங்கை மின்சார சபையின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், வர்த்தகம், வழங்கல் மற்றும் கொள்வனவு போன்றவற்றை பிரிவுகளாக வகுத்து, அவற்றை நிறுவனங்களாக மாற்றுவதற்கான சட்ட மாற்றங்கள் இலங்கை மின்சார சட்டமூலத்தில் முன் மொழியப்பட்டிருந்தன.

இது தொடர்பான மனுக்களை பரிசீலித்த உயர் நீதிமன்றம், அரசமைப்பின் 12 01 சரத்திற் கமைய குறித்த வரைபு அரசமைப்பிற்கு முரணானது என தீர்ப்பளித்துள்ளது. இலங்கை மின்சாரசட்டமூலத்தைதற்போதுள்ள வகையில் அமுல்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என உயர் நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

## மோடிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் தங்களுடைய கட்சி நாடு தழுவிய ரீதியில் பெற்ற வெற்றிக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

தங்களின்தலைமையில்பாரதீய ஜனதாகட்சிதொடர்ந்தும்மூன்றாவது தடவையும் நாடாளுமன்றத் தேர்தலில்வெற்றியைபெற்று ஆட்சி அமைப்பது தங்கள் மீது மக்கள் கொண்டுள்ள அதீத நம்பிக்கையை பறை சாற்றுகிறது.

தங்களது இந்த வெற்றிக்கு எமது ஈழ மக்கள் சார்பாகவும் நமது கட்சி சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். தங்கள் அரசியல் பணி தொடர்ந்து சிறக்க எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏமாற்றுத் தனங்களையும் உறுதியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில், ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினராகியநாம்ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து ஏற்றுக்கொண்டதோடு அதனை முன்கொண்டு செல்வதற்கானமுழுஆதரவினையும் வெளிப்படுத்தியிருந்தோம்.

அதேநேரத்தில், இத் தீர்மா னத்தை ஒரு சில அரசியல் கட்சிகளினதும், ஒரு சில சமூக செயற்பாட்டுக் குழுக்களினதும் தீர்மானமாகவன்றி, தமிழ்தேசியப் பரப்பில் இயங்கும் அனைத் துத் தரப்பினரதும் ஏகோபித்த கோரிக்கையாக முன்னெடுப்பதன் மூலம், தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்மானங்களை மிகவும் காத்திரமான முறையில் வலுமிக்கதான முன்னெடுக்க முடியும்என்பதையும்தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

தமிழ்ப் பொது வேட்பாளர் கோரிக்கை பேசுபொருளாக ஆரம்பித்தகாலத்தைவிட இன்றைய காலகட்டத்தில், பல்வேறுதரப்பினரது அயராத முயற்சிகளால், அக் கோரிக்கையின் ஆதரவுத் தளம் அதிகரித்து வருவதோடு கோரிக்கையின்நியாயத்தன்மையும் பரந்த அளவில் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலைமை மேலும் சிறப்புறவும், தென்னிலங்கையிலும் சர்வதேசத்திலும் அக் கோரிக் கையில் உள்ள நியாயங்களை விஞ்ஞானபூர்வமாக உறுதிப்ப டுத்தவும், இயன்றளவில் மிகப் பெரும்பான்மையான தமிழ்த் தேசியச் செயற்பாட்டு சக்திகளுடன் இணைந்து முன்கொண்டு செயற்படுவது, தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு அவசியமானது என்பதை எமது கட்சியின் மத்தியகுழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொண்டதோடு அதனை முன்கொண்டு செல்வதற்கும், அர்ப்பணிப்புடன்செயற்படுவதற்கும் தீர்மானம்மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

## சட்டவிரோதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களை கருத்திற்கொண்டு அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பித்தார்.

குறித்த பிரதேசத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கு மூல காரணங்களைஅடையாளங்கண்டு எதிர்வரும் காலங்களில் அவ்வா றான நிலைமைகள் மீண்டும் ஏற்படாமல்இருப்பதற்குநடவடிக்கை களை முன்மொழியவும், எல்லைப் பகுதிக்குள்காணப்படும்காணிகளை அதிகபட்சம் பயனுள்ள வகையில் பயன்படுத்தி கொலன்னாவை நகரத்தைமீண்டும்திட்டமிடுவதற்காக விரிவான அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கு குழுவொன்றை நியமிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பா.ஜ.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில், பாஜகதலைமையிலான என்டிஏ வெற்றி பெற்றதற்கு எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

'நெருங்கிய அண்டை நாடாக, இந்தியாவுடனான கூட்டுறவை மேலும் வலுப்படுத்த இலங்கை எதிர்நோக்குகிறது' என்று விக்கிரமசிங்க மேலும் கூறினார்.

## பர்தா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து, சிறந்த முறையில் ஆட்சி செய்திருக்கின்றார்கள். எனினும், தற்போது நமது நாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள், துன்புறுத்தல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

எமது இஸ்லாம் மார்க்கத்தில், பெண்களின் உரிமை தொடர் பில் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அவர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் கண்டிப்பான, கரிசனை காட்டியிருக்கின்றது. எனினும், சர்வதேச நாடுகளில் இஸ்லாம் மீதான அபாண்டங்கள் பரப்பப்படுவதுடன், பெண்களை இஸ்லாம் துன்புறுத்துவதாகவும் கொச்சைப்படுத்துவதாகவும் பிழையான தரவுகள் பரப்பப்ப டுகின்றன. சர்வதேச ஊடகங்கள் இதனை திட்டமிட்டுச் செய்கின்றன.

அதேபோன்று, இலங்கையில் முஸ்லிம்களுக்கான விவாக, விவாகரத்துச் சட்டம் (ஆஆனுயு) தொடர்பில் தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு, அரசசார்பற்றநிறுவனாங் கள் அதனை பேசுபொருளாக் கியுள்ளது. இதனால் முஸ்லிம் பாராளுமன்றஉறுப்பினர்கள்கையெ ழுத்திட்டு சில திருத்தங்களை சமர்ப்பித்தோம். எனினும், இதுவரை யில் அந்தச் சட்டம் திருத்தப்பட்டு சட்டமூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, நீதி அமைச்சர் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, வெளிநாடு களுக்கு பெண்கள் வேலைக்கு செல்வதால், அவர்களின் குடும்பம் மற்றும் பிள்ளைகள் சீரழிகின் றனர். எனவே, இதற்கு திட்டமிடப் பட்ட ஒழுங்குவிதிகளை மேற் கொண்டு, முறையான தீர்வினை பெற்றுக்கொடுக்குமாறு வேண்டு கின்றேன்.

பெண்களை கல்விரீதியாக, சமூகரீதியாக, அரசியல்ரீதியாக, பொருளாதார ரீதியாக வலுவூட்ட வேண்டிய தேவை நிறையவே காணப்படுகின்றது. முன்னொரு காலத்தில் முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில்லை என்ற விடயம் பலராலும் சிலாகிக்கப்பட்டது. ஆனால், அவர்கள் தற்பொழுது கல்வித் துறையில் உயர்வடைந்து, உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

அந்தவகையில், கடந்த 31ஆம் திகதி உயர்த்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின. பலர் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ளனர். அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். எதிர்பார்த்த பெறுபேறுகளைபெறமுடியாதவர்கள் முயற்சிகளை கைவிடாது, தொடர்ந் தும் முயற்சி செய்ய வேண்டும்.

அத்துடன், திருகோணமலை சாஹிரா கல்லூரியில் கல்வி கற்று, சென்ஜோசப்கல்லூரியில்உயர்தரப் பரீட்சை எழுதிய 70 முஸ்லிம் மாணவிகளின்பரீட்சைபெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த விவகாரம்தொடர்பில்,எமதுகட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அப்துல்லா மஹ்ரூப் அவர்களின் ஊடாக உண்மை நிலையை விசாரித்தேன். இதுகுறித்து, ஸாஹிரா கல்லூரி அதிபர் முகைசுடனும் உரையாடினேன். பாதிக்கப்பட்ட மாணவியொருவர் மற்றும் பெற்றோருடனும் பேசினேன். இது ஒரு திட்டமிட்ட சதியாகவே எமக்கு புலப்படுகின்றது.

ஏற்கனவே, திருமலை மாவட்ட பாடசாலையொன்றில்ஆசிரியையின் அபாயா பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தபோது, நீதிமன்றம்பாடசாலை நிர்வாகத்தைஎச்சரித்தமைநாடறிந்த விடயம்.

இந்தப் பின்னணியில், 70 மாணவர்களின் பரீட்சை முடிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. நாளை(5) தொடக்கம் பரீட்சை வினாத்தாள்கள் மீளாய்வுக்கான திகதி அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த மாணவிகளுக்கு மீளாய்வுக்கான சந்தர்ப்பமும் இல் லாமல்போகும்அச்சம்ஏற்பட்டுள்ளது.

இந்த மாணவிகள் பர்தா அணிந்து வந்தார்கள் என்ற காரணத்திற்காகவே இவ்வாறு பரீட்சை பெறுபேறுகளை இடைநிறுத்தி வைத்துள்ளனர். அங்கிருந்த அதிகாரிகள் திட்டமிட்டு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். பரீட்சை எழுதும்போது காதுகளைகாட்டுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். முதல் நாளில் 70 மாணவிகளுக்கும் பொறுப்பதிகாரிகள் பர்தாவினை விளக்கி, அவர்களின் காதுகளை காட்டுமாறு கூறியபோது, மாணவி கள் அதனை செய்துவிட்டே பரீட்சை எழுதியிருக்கின்றார்கள். பரீட்சை நடைபெற்ற காலங்களில், அதிகாரி கள் மாணவிகளிடம் 'பரீட்சை பெறு பேறுகள் வெளிவராது என்றும் தெரிவித்துள்ளனர். மாணவிகள் சுதந்திரமாக பரீட்சை எழுதுவதை இவர்கள் தடைசெய்துள்ளனர்.

அதன் பின்னர், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் மாணவி களிடம் விசாரணையும் மேற்கொள் ளப்பட்டுள்ளது. அந்த விசாரணை களின்போது, பரீட்சைஆணையாளர் எடுக்கும் தீர்மானத்திற்கு அமைய நாங்கள் கட்டுப்படுவோம் என கையொப்பமிடுமாறு மாணவிகள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். கையொப்பமும் வாங்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரையில் பெறுபேறுகள் வெளியாகவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் இது தொடர்பில் நான் முறையிட்டுள்ளேன். இன்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்காவிடமும் இந்த விடயத்தை பிரஸ்தாபித்தேன்.

பெண் உரிமை தொடர்பான சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ள இந்த வேளையில், பெண்கள் பர்தா அணிவதை பிழையாகக் கருதி, பரீட்சை பெறுபேறுகளை இடைநிறுத்தி வைப்பது, எந்த வகையில் நியாயம்? எனக் கேட்கின்றேன்.

ஆகையால், ஆவலுடன் எதிர்ப்பார்த்திருந்த பரீட்சை பெறுபேறுகள் வெளியாகாமல், மாணவிகள் படும் வேதனைகளை மனதில் நிறுத்தி, அவசரமாக பெறுபேறுகளை வெளியிடுமாறு இந்த உயர்சபையில் வேண்டுகோள் விடுக்கின்றேன்' என்றார்.




# திருமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் இடைநிறுத்தப்பட் பெறுபேற்றை வெளியிட ஆணையாளர் நடவடிக்கை எடுக்துக

## கலீலூர் ரஹ்மான் கோரிக்கை



திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் உயர்தர பரீட்சை பெறுபேறு வெளியிடப்படாமல் இடைநிறுத்தம் செய்யப்பட்ட விடயம் இலங்கையில் இன்னும் மனிதாபிமானம் உயிர்வாழ கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையே உணர்த்துகிறது. அந்த மாணவிகளின் வாழ்வோடுவிளையாட முனையும் யாரையும் நாம் அனுமதிக்க முடியாது. மாணவிகளின் உயர்தர பரீட்சை பெறுபேற்றை உடனடியாக வெளியிட பரீட்சை ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் உயர்தர பரீட்சை பெறுபேறு வெளியிடப்படாமல் இடைநிறுத்தம் செய்யப்பட்ட விடயம் இலங்கையில் இன்னும் மனிதாபிமானம் உயிர்வாழ கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையே உணர்த்துகிறது. பரீட்சை மண்டபத்தில் இஸ்லாமிய மாணவிகள் தமது காதுகளை மூடி பரீட்சை எழுதினார்கள் என்ற குற்றச்சாட்டில் இந்த இடைநிறுத்தம் இடம்பெற்றுள்ளது என்பதை அறிந்து கவலைப்பட மட்டுமே முடிந்தது. காதுகளை மூடி பரீட்சை எழுதியமை தொடர்பில் பரீட்சை மண்டபத்தில் கவனித்திருக்க வேண்டிய விடயம். அவர்கள் தொடர்பில் சந்தேகங்கள் இருந்தால் மண்டபத்திலேயே அதனை முடித்திருக்க முடியும்.

முஸ்லிம் மாணவர்கள் யுத்தம் முடிந்த பின்னர் கடுமையாக கல்வியில் கவனம் செலுத்தி வருவதை தடுக்கும் விதமாக நடைபெற்ற சம்பவமாகவே இதனை நோக்கவேண்டியுள்ளது. முஸ்லிங்களின் கல்வியை நசுக்க எடுத்த இனப் பாகுபாட்டின் உச்சமாகவும் இந்த சம்பவத்தை நோக்கலாம். இந்த இனவாத செயலை உடனடியாக ஜனாதிபதி, பிரதமர், கல்வியமைச்சர் ஆகியோர் கவனத்தில் எடுத்து தீர்வை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். பரீட்சை மண்டபத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய இந்த விடயத்தை பெறுபேற்றை இடைநிறுத்தும் அளவுக்கு கொண்டு சென்ற பரீட்சை மேற்பார்வையாளர் ஆளுமையற்ற கல்வி பரப்புக்கு பொருத்தமற்ற ஆசிரிய தொழிலை கேவலப்படுத்தும் மனநிலை கொண்ட ஒருவராகவே நாம் பார்க்கிறோம். ஒரேமொழியை பேசும் சகோதர இன மாணவிகளின் உரிமைகளில் கை வைப்பது சகோதரத்துவத்துக்கு ஆரோக்கியமானதல்ல. பிள்ளைகளினதும் பெற்றோரினதும் இன்றைய மோசமான மனநிலையை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுடன் பரீட்சை ஆணையாளர் உடனடியாக மாணவர்களின் பெறுபேற்றை வெளியிட முன்வரவேண்டும்.

இந்த விடயத்தில் சகல முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளும், சிவில் அமைப்புக்களும் ஒன்று பட வேண்டும். இது ஒரு சமூகப் பிரச்சினை மட்டுமல்ல உரிமை சார்ந்த பிரச்சினையும் கூட. கிழக்கு மாகாண முஸ்லிம் விரோத செயற்பாடுகளின் தொடர்ச்சியாகவே இதனை நோக்கவேண்டியுள்ளது. - என்றார .(05)

# புலம்பெயர் நாடுகளில் வசிப்பவர்களை இலக்குவைத்து பல கோடி ரூபா மோசடி

## யாழ்ப்பாணத்தில் போலி வைத்தியர் கைது

யாழ்ப்பாணத்தை சேர்ந்த போலி மருத்துவர் ஒருவர் புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தமிழர்களை இலக்கு வைத்து பல கோடி ஷரூபா மோசடி செய்துள்ள நிலையில் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர், சுமார் ஒரு கோடியே 50 லட்ச ஷரூபா பெறுமதியான அதிசொகுசு காரில் யாழ். நகர் பகுதியில் பயணித்த போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் , கைது செய்யப்பட்ட வேளை ,காரினுள் இருந்து 15 பவுண் தங்க நகைகள் , 05 லட்சம் ஷரூபா பணம் மற்றும் இலட்ச ஷரூபாய்க்கள் பெறுமதியான அதிநவீன கையடக்க தொலைபேசிகள் 5 என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் ,போலியான வைத்தியர்களுக்கான அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை தயாரித்து தன்னை வைத்தியராக அறிமுகப்படுத்தி, ஏழை மக்களுக்கு இலவச மருத்துவ முகாம்களை நடத்தி வருவதாக கூறி புலம்பெயர் நாடுகளில் வசித்து வரும் தமிழர்களை ஏமாற்றி, பெரும் தொகையான பணத்தைப் பெற்று யாழ்ப்பாணத்தில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் யாழ்.நகர் பகுதியில் உள்ள தனது காணியொன்றை ஒரு கோடியே 42 இலட்சம் ஷரூபாவுக்கு விற்பனை செய்வுள்ளதாக கூறி போலியான உறுதி உள்ளிட்ட போலி ஆவணங்களை அனுப்பி, கனடா வாசியிடம் இருந்து ஒரு கோடியே 40 இலட்சம் ஷரூபா பணத்தை சட்டவிரோதமான முறையில் (உண்டியல் மூலம்) பெற்றுள்ளார். சில தினங்களின் பின்னரே தமக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை என கனடாவை சேர்ந்தவருக்குத் தெரியவந்துள்ளது.

அதனை அடுத்து, யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை , மோசடியில் ஈடுபட்ட நபர் , போலியாக தன்னை ஒரு மருத்துவர் என கூறி புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் நபர்கள் பலரிடம் பல ஆண்டு காலமாக இலவச மருத்துவ முகாம்களுக்கு என பல கோடி ஷரூபா மோசடியில் ஈடுபட்டு வருகின்றார் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் குறித்த நபர் அதிசொகுசு காரில் யாழ்.நகர் பகுதியில் பயணிப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், காருடன் ஷரூசந்தேகநபரை கைது செய்துள்ளனர்

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# கொழும்பு - கொச்சிக்கடை அந்தோனியார் கொடியேற்றம்









கொழும்பு-13,கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல கொடியேற்ற வைபவம் திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

புனித அந்தோனியார் திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பற்றிக் பெரேய்ரா புனித அந்தோனியாரின் கொடியை ஆசீர்வதித்து ஏற்றி வைத்தார்.

இந்த கொடியேற்ற நிகழ்வில் நூற்றுக்கணக்கான பக்தர் கலந்துகொண்டனர். (05)

# இலங்கையின் முன்னாள் படைவீரர்கள் ரஷ்ய ராணுவத்தில் போரிடுகின்றனர்

## அந்நாட்து இராணுவமே அவர்களை இணைத்தது என மோர்னிங் தகவல்

ரஸ்ய அதிகாரிகளிற்கும் மொஸ்கோவில் உள்ள இலங்கை தூதரகத்தின் இராஜதந்திரிகள் சிலருக்கும் இடையில் வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது ரஸ்யாவில் இலங்கையின் முன்னாள் படைவீரர்கள் ரஸ்ய இராணுவத்தின் ஒரு பகுதியாகவே போரிடுகின்றனர் என்ற விடயம் தெரியவந்துள்ளதாக விடயம் குறித்து நன்கறிந்தவர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையின் முன்னாள் படைவீரர்களை ரஸ்ய இராணுவமே தனது படையணிகளில் இணைத்துக்கொண்டுள்ளது வாக்னர் குழுக்கள் போன்றவை அவர்களை சேர்க்கவில்லை என்பது தற்போது தெளிவாகியுள்ளது எனவிடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தங்கள் படையணிகளில் முன்னாள் இலங்கை படைவீரர்கள் உள்ளதையும் அவர்கள் போரில் ஈடுபட்டுள்ளதையும் ரஸ்ய அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ரஸ்ய இராணுவத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் அதனை பின்பற்றவேண்டும் இதன்காரணமாக முன்னாள் படைவீரர்கள் தாங்கள் நினைத்தநேரத்தில் அங்கிருந்து வெளியேற முடியாது ரஸ்யாவின் இராணுவத்தின் கட்டளை பீடங்களே அதற்கு அனுமதி வழங்கவேண்டும் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த வாரம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரகபாலசூரிய இலங்கையின் முன்னாள் படைவீரர்கள் ரஸ்ய படைப்பிரிவின் ஒருபகுதியாக செயற்படுகின்றனரா என்பதை அறிவதற்காகவே மொஸ்கோ சந்திப்பை இலங்கை பயன்படுத்தும் எனத் தெரிவித்திருந்தார். அவர்களை போர் முன்னரங்கிலிருந்து அகற்ற முடியுமா என்பது குறித்து ஆராய்வதற்காகவும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறித்து அறிவதற்காகவும் காயமடைந்தவர்களை மீள இலங்கைக்கு அழைக்க முடியுமா என ஆராயவும் இந்த சந்திப்பை இலங்கை பயன்படுத்தவுள்ளது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்திருந்தார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சிவகுமாரன் எனும் விடுதலைத் தீப் பொறி

ஈழ விடுதலைப் போராட்ட முன்னோடியான பொன். சிவகுமாரனின் 50ஆவது நினைவு நாள் இன்று. இன்றிருக்கும் அரசியல் சூழலில் உரும்பாயில் இருக்கும் அவரது உருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்த தலைவர்கள் எல்லோரும் கூடுவர்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. ஆனால், அந்தத் தலைவர்கள் சிவகுமாரனின் அரசியல் வேட்கையை, வேணவாவை உண்மையில் தம் நெஞ்சில் சுமந்து அதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கிறார்களா என்பது பெரும் கேள்விக்குரியதுதான்.

1950இல் பிறந்தவர் பொன். சிவகுமாரன். ஆவணி 26 பிறந்த அவர், 1974 ஆனி 5 மறைந்தார். யாழ். மாவட்டம் உரும்பிராயில், அவரது சொந்த இடத்திற்கருகில் சயனைட் அருந்தி உயிர் மாய்த்தார். இலங்கைக் காவல்துறையினரின் கைகளில் தான் உயிருடன் அகப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அவர் அந்த முடிவை எடுத்தார். பின்னாளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கழுத்தில் சயனைட் கட்டுவதற்கான முன்னோடியாக இது இருந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிவகுமாரன் கல்வி கற்ற காலத்தில்தான் இலங்கையில் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் மாணவர்களைத் திட்டமிட்டு ஒதுக்குவதற்காகவே இந்தத் தரப்படுத்தல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று அரசியல் குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில் கொழுந்துவிடத் தொடங்கிய தமிழர்களின் விடுதலை வேட்கையின் முகிழ்ப்பு சிவகுமாரன்.

இலங்கை ஆளும் தரப்பின் தரப்படுத்தல் திட்டத்துக்கு எதிராகத் தொடங்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிவகுமாரன் செயற்பட்டார். 1970களின் தொடக்கத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த சோமவீர சந்திரசிறீயின் வாகனத்துக்கு குண்டு வைத்தவர் சிவகுமாரன் என்று குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.

தன்னுடைய அறிவையும் உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப் பொருள்களையும் கொண்டு குண்டுகளைத் தயாரித்து அவற்றை அரசியல் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தும் முறையை விடுதலைப் போராட்டத்திற்கு அறிமுகப்படுத்திய முன்னோடியாகவும் சிவகுமாரனைப் பார்க்கலாம்.

1971 ஆம் ஆண்டு தொடக்கத்தில் யாழ்ப்பாண நகரத் தந்தையாகவும்அப்போது சிறிமா கட்சியின்அமைப்பாளராகவும் இருந்த அல்பிரட் துரையப்பாவுக்கு குறிவைத்து அவரது வாகனத்தில் குண்டு பொருத்தினார். குண்டுவெடித்து சிதறி வாகனத்தின் மேல்பக்கம் எல்லாம் பெருந்தொலைவுக்கு சென்று விழுந்தது. ஆனால் துரையப்பா வருவதற்கு முன்னரே குண்டு வெடித்துச் சிதறியது. இந்தத் தாக்குதலே ஈழ விடுதலைப் போராட்டத்தில் முதல் தாக்குதல் என்று கருதப்படுகிறது.

அதன் பின்னர் துரையப்பாவின் வாகனத்துக்கு குண்டு வைத்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டு காலம் சிறையிலே கழித்தார். சிறையிலிருந்து வெளியே வந்த பின்னர் மீண்டும் அவர் சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். தனியே தாக்குதல் முயற்சி என்பதுமட்டும் அல்ல. குறிக்கோளை வைத்துக் கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபடுத்திக்கொண்டார். இளைஞர் பேரவை அப்போது நடத்திய உண்ணாவிரதம் போன்றவற்றில் பங்கேற்று மதியுரைகளை வழங்கிச் செல்வார்.

1973 இல் மாணவர் பேரவையின் பொறுப்பாளராக இருந்த சத்தியசீலன் போன்றவர்கள் கைதான காலகட்டம். அதற்கு முதலே சிவகுமாரன் கைதாகி, அனுராதபுரம் சிறையிலே அடைக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குகளும் நடைபெற்றன.

கோப்பாயில் காவல் துறையினர் சுற்றிவளைத்த போது அகப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக சயனைட் அருந்தி இறந்தார். ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் சயனைட் அருந்தி தன்னுயிரை மாய்த்தவர் இவரே.

சிவகுமாரனின்இறப்புஇளைஞர்களிடத்திலேபேரெழுச்சியை ஏற்படுத்தியது. சுடுகாட்டுக்குப் பெண்களை இழுத்து வந்த நிகழ்வாகஅது அமைந்தது. ஈழத்தமிழர்விடுதலைப்போராட்டம் என்கிற காட்டுத் தீ பரவுவதற்கான தீப் பொறி சிவகுமாரன் என்றால் மிகையில்லை. ஒரு மாணவனாக, இளைஞனாக இனம் பற்றிய அவரது பரந்த சிந்தனையிலிருந்து இன்றைய அரசியல் தலைவர்கள் பாடம் கற்றவேண்டியது அவசியம்.



# விடாமுயற்சியே வெற்றியின் முதல் படி

**கதிரவன்**



இரண்டு தவளைகள் ஒரு தயிர்ப் பானைக குள் விழுந்து விடுகின்றன ஒரு தவளை "நான் என்ன செய்ய முடியும்...", என்று வருந்தி புலம்பி வீணே இருக்கிறது, சிறிது நேரத்தில் அது இறந்து போகிறது. இன்னொரு தவளை எப்படியாவது வெளியேற வேண்டும் என்ற எண்ணத்தில், கால்களை இடைவிடாது உதைத்து நீந்துகிறது. சிறிது நேரத்தில் தயிர் வெண்ணையாகத் திரள்கிறது- அதன் மீது தவளை உட்கார்ந்து தாவிக் குதித்து வெளியேறுகிறது.

இலக்கை நோக்கிய முயற்சியைப் பற்றி இப்படி ஒரு கதைப் புனைவை கலாநிதி எம்.எஸ்.உதயமூர்த்தி தனது நூல் ஒன்றில் சுட்டிக் காட்டியிருப்பார்.

உலகில் சாதனை புரிந்தவர்கள் அல்லது சரித்திரம் படைத்தவர்கள், கல்வியில் சிறந்த மாணவர்கள், பெரும் பொருள் ஈட்டும் வணிகர்கள், தலைசிறந்த தொழில் அதிபர்கள், அரசியல்வாதிகள், விஞ்ஞானிகள் என எந்தத் தரப்பினரை எடுத்துக் கொண்டாலும், அவர்களுக்குள் இருக்கும் ஒரு முக்கியமான ஒற்றுமை அல்லது அவர்கள் அனைவரிடமும் இருக்கும் கூறு, விடாமுயற்சி என்பதாகும்.

இலக்கை முதல் முயற்சியிலேயே எல்லோரும் எட்ட முடியும் என்று உறுதியாகக் கூற முடியாது. இடர்ப்பாடுகள் வரலாம், தோல்விகள் கிடைக்கும், மனம் தளராமல், மீண்டும் முயற்சி செய்து, வெற்றி எனும் இலக்கை அடைபவர்கள் சாதனையாளர்கள்.

கூர்ந்து கவனித்தால், ஒரு விஷயம் தெளிவாகத் தெரியும். அவர்கள் தோல்வியை நோக்கும் பார்வையில், பிறரிடம் இருந்து வேறுபடுகிறார்கள்.

தோல்வி என்ற சொல்லே அவர்கள் அகராதியில் இல்லை எனலாம். முயற்சியில் வெற்றி கிட்டவில்லை எனில், அவர்கள் அதைப் பின்னடைவு என்று எடுத்துக் கொள்வார்களேயன்றி, தோல்வி என்று கருத மாட்டார்கள். அதுவே விடாமுயற்சிக்கு வித்து.

விடாமுயற்சி என்பது செயல் அல்ல, ஒரு மனநிலை என்று சொல்லலாம். பொதுவாக, வெற்றி நழுவும்போது, அதற்கான காரணங்கள், எந்தவித சலனமும் இன்றி அலசப்படும், படிப்பினைகள் கற்றுக் கொள்ளப்படும், பாடங்கள் ஏற்கப்படும். பின்னடைவுகள் வெற்றிக்கான படிக்கட்டுகள் என்று கொள்ளப்படும். முறையான திட்டமிடுதலுடன், மீண்டும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

விடாமுயற்சி என்பது உளவியல் சார்ந்த ஒன்று பிறர் ஊக்குவிப்பதைவிட, தங்களைத் தாங்களே ஊக்குவித்துக் கொள்ளும் வித்தை கற்றவர்கள் விடாமுயற்சியாளர்கள்.

உலகிலேயே உங்கள் மீது உங்களுக்குத்தானே அதிக அக்கறை இருக்க வேண்டும்? உங்களை ஊக்குவிக்க, உங்கள் மீது உங்களைவிட அக்கறை கொண்ட இன்னொருவர் இருக்க முடியுமா? தோல்வியாளன் என பிறர் நினைக்கட்டும் பரவாயில்லை... எக்காரணம் கொண்டும் நீங்கள் அந்த நினைப்புக்கு இடம் தராதீர்கள்.

தனிமனிதன் அல்லது அவன் சார்ந்த குடும்பம் மட்டுமல்ல, உலகமே விடா முயற்சியாளர்களுக்கு கடன்பட்டுள்ளது. அவர்களின் விடாமுயற்சியின் காரணமாக அளப்பரிய நன்மைகளை உலகம் பெற்றிருக்கிறது. ஒரு நாட்டில் உள்ள அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் தங்களது விடாமுயற்சியின் விளைவாகக் கண்டுபிடித்தவற்றைக் கொண்டு, அந்நாடு பெரும் பயன் பெறுகிறது. அதிவேகம் கொண்ட வளர்ச்சி விகிதம் பெறுகிறது. ஒரு தனிமனிதனின் விடாமுயற்சியால் ஒருநாடு முன்னேற்றம் அடையும் என்றால், விடாமுயற்சி எனும் குணம், அம்மக்களின் பொதுக்குணமாக மாறினால்?

யூதர்களின் பொதுக்குணம் விடாமுயற்சி என்பது குறிப்பிடத்தக்கது. யூதர்கள் எதிர்கொண்ட இன்னல்கள், அவற்றை அவர்கள் கையாண்ட விதம், பல்வேறு நாடுகளில் தஞ்சமடைந்து வாழ வேண்டிய அவலம், அவர்களது எபிரேய மொழி அநேகமாக வழக்கொழிந்த நிலை, ஹிட்லரின் கொடுமைகளால் பட்ட துயரங்கள் -இவை யாவும் அம்மக்களை மனந்தளரவிடவில்லை. மாறாக, யூதர்கள் எஃகனைய இதயத்துடன் இன்னல்களை எதிர்கொண்டனர் தங்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்கினர், விடாமுயற்சி காரணமாக, சின்னஞ்சிறிய நாடாக இருப்பினும் ஒதுக்கித் தள்ள முடியாத இடத்தை உலக அரங்கில் பெற்றிருக்கின்றனர்.

விவசாயம், வணிகம், ஆயுத தயாரிப்பு, அறிவியல் ஆய்வு, மொழி மீட்பு என பல தளங்களில் பெரும் வெற்றி கண்டனர். இப்பின்னணியில், நாம் என்ன செய்ய வேண்டும் என்ற வினா எழுகிறது. நம் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள், இல்லங்களில் பெற்றோர்கள், பொது வெளியில் நாட்டின் தலைவர்கள், மக்களிடையே தோல்வி என்ற சொல்லை முழுமையாக அகற்ற வேண்டும். விடாமுயற்சி என்பது ஒவ்வொரு தனி மனிதனின் சிறப்பு குணமாக வளர்ந்து, நாட்டு மக்களின் பொதுக்குணமாக மாற வேண்டும். விடாமுயற்சியின் அவசியம் பற்றி சிறுவர்கள் மனதில் ஆழமாகப் பதியப்படவேண்டும்.

வெற்றியாளர்களின் விடாமுயற்சி சார்ந்த நிகழ்வுகள், சாதனைகள் சாமானியர்களின், மாணவர்களின் பேசுபொருளாக இருக்கவேண்டும். விழுவது தவறல்ல, குற்றமுமல்ல. விழுந்தால் மீண்டும் எழுந்து ஓட வேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் விதைக்கப்பட வேண்டும்.

முந்தைய வெற்றிகளை அவ்வப்போது மனதில் அசைபோடுதல், தோல்வியை சமமான மனநிலையில் அணுகுதல், படிப்பினை கற்றுக் கொள்ளுதல், பிறர் தோல்விகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளுதல் போன்றவற்றை இளம் வயதில் கற்றுக்கொடுக்கவேண்டும் .

நம் பாட்டன் வள்ளுவரும் நமக்கு விடா முயற்சி குறித்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்தியம்பி உள்ளார். விடாமுயற்சியாளர்களை "திண்ணியர்", என்கிறார். முடிவில் இன்பம் தரும் செயலைச் செய்யும்போது துன்பம் மிக வந்தாலும், துணிவு மேற்கொண்டு செய்து முடிக்க வேண்டும் என்கிறார்.

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை
( குறள் – 669)

## சமன் கொல்லா'வின் உறவினர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது!

அம்பலாங்கொடை பிரதேசத்தில் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 'சமன் கொல்லா'வின் நெருங்கிய உறவினர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் அம்பலாங்கொடை, வெனமுல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

கைதானவர் குளிகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் இவரிடமிருந்து 08 கிராம் 140 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (05)

## மயிலத்தமடு போராட்டத்தில் கைதான பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை

*மட்டக்களப்பு மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராக கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் போராட்டத்தில ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் திங்கட்கிழமை ஏறாவூர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.*

*இலங்கை பாதுகாப்புத் துறை போதிய சாட்சியங்களை முன்வைக்கத் தவறியமை, குற்றப்பத்திரிகையில் காணப்பட்ட முரண்பாடு, மேலும் குற்றச்சாட்டுக்களை முன்கொண்டு செல்வதற்கான எவ்வித முகாந்தரங்களும் இல்லை எனும் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர்கள் 06 பேரும் ஏறாவூர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். (05)*

## அநுராதபுரத்தில் சடலம் மீட்பு

அநுராதபுரம், மிகிந்தலை பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பாலுவெள பகுதியில் உள்ள வீடொன்றின் பின்புறத்திலிருந்து ஆணொருவரின் சடலம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக மிகிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

மிகிந்தலை, பாலுவெள பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிகிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## மின் கம்பத்தில் மோதி இ.போ.ச பஸ் விபத்து



இரத்தினபுரி, புவக்கஹவெல பிரதேசத்தில் பஸ் ஒன்று வீதியிலிருந்த மின்கம்பமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (05)

## சீரற்ற காலநிலையால் பல்வேறு நோய்கள் பரவக்கூடிய அபாயம்



நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு நோய்கள் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வயிற்றுப்போக்கு, தடுமல், வைரஸ் காய்ச்சல்கள் உள்ளிட்ட நோய்கள் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாகச் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.


இந்த நோய்களானவை அசுத்தமான நீர் மற்றும் உணவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இலகுவாகப் பரவக்கூடும் எனத் தெரிவித துள்ளார்.

காய்ச்சல், வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, வயிற்று வலி மற்றும் மலத்துடன் இரத்தம் கசிதல் உள்ளிட்டவை இந்நோய்களுக்கான அறிகுறிகளாகும்.

இந்நிலையில், குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் காய்ச்சல் விரைவாகப் பரவினால் அது வைரஸ் காய்ச்சலாகவும் இருக்கலாம்.

குளிர் காலம் காரணமாகக் குழந்தைகள் மத்தியில் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# தொழிலாளர்கள் உழைப்பை சுரண்டி முதலாளிமார் செல்வந்தர்களாகும் முறையை மாற்றியமைப்போம்

## தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார திட்டவட்டம்

முதலாளிமார்களுக்கு தோட்டங்களை முறையாக பராமரித்து முன்னேற்ற முடியாது என்றால், அந்த தோட்டங்களை மீண்டும் அரசாங்கம் பெற்றுக்கொண்டு, முறையாக பராமறிக்க முடியுமானவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்போம். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி முதலாளிமார்கள் மாத்திரம் செல்வந்தர்களாகும் முறையை நாங்கள் மாற்றியமைப்போம் என தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெருந்தோட்டங்கள் பாரிய பங்களிப்பை வழங்குகின்றன. பெருந்தோட்டங்களையும் அரசாங்கத்தின் கீழ் காணப்படும் தோட்டங்களையும் நாம் பாதுகாக்க வேண்டும். பாரம்பரியமாக இத்தொழிற்துறையில் ஈடுபட்டுவரும் எமது தொழிலாளர்களை சுரண்டி உழைப்பு நடத்துகிறார்கள். இருக்கின்ற பழைய தேயிலைப் செடியை வைத்துக்கொண்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ஷரூபா மாத்திரமே வேதனம் வழங்கப்படுகிறது. முதலாளிகள் மாத்திரமே பணக்காரரர்களாகும் முறையை நாம் மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்தபட்ச சம்பளம்1700 ஷரூபா வழங்கப்பட வேண்டும். புதிய உத்திகளைப் பயன்படுத்தி அதிகளவான தேயிலை கொழுந்துகளை உற்பத்தி செய்யும் தோட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். நவீன தொழில்நுட்பத்தை கையாண்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உழைக்கும் மக்கள் 1000 ஷரூபாவில் வாழலாம் என்று சொன்னால் அது தவறு. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்துள்ளது, வறுமை நிலை 26 வீதமாக அதிகரித்துள்ளது, அதிக வறுமை நிலை தோட்டத் துறையிலேயே உள்ளது. அதனால் தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில் அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தி சட்டங்களை மாற்றி அமைப்போம்.

எனவே, பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு சம்பளத்தை வழங்க முடியாவிட்டால் பெருந்தோட்டங்களை தொழிலாளர்களை பாதுகாத்து நிர்வகிக்கக்கூடியவர்களுக்கு வழங்குவோம். தோட்டங்கள் அரசுக்கு சொந்தமானவை. முதலாளிமார்களுக்கு வாடகைக்கே அவை வழங்கப்பட்டிருக்கின்றன. அதனால் அவர்களால் தோட்டங்களை முறையாகப் பராமரித்து முன்னேற்ற முடியாது என்றால், தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வகையில், அந்த தோட்டங்களை மீண்டும் அரசாங்கம் பெற்றுக்கொண்டு, முறையாகப் பராமரிக்க முடியுமானவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்போம்.



அது மாத்திரமன்றி தோட்ட மக்களுக்கு தோட்டத்தில் வீடுகள் அமைப்பதற்கு ஒரு கிராமத்தை வழங்கி, ஒரு துண்டு காணியை உரித்து உரிமையாக வழங்குவதற்கும், தோட்டத்தின் உரிமையாளராக விவசாயம் செய்வதற்கும் தோட்ட மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அதேநேரம், பதுளை மாவட்டத்தில் தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நன்மைகளை வழங்கும் விசேட வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருகிறது. - என்றார். (05)

# மதவாச்சியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் இறப்பு

*அநுராதபுரம், மதவாச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.*

*அநுராதபுரம், மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*இவர் தனது காணிக்குச் சென்ற காட்டு யானையை விரட்ட முற்பட்ட போது இவ்வாறு யானை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இதனையடுத்து, காயமடைந்தவர் மதவாச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)*




## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் மிக முக்கியமான தேசியப் பிரச்சினை வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்தாமல் நாட்டை ஒரு பங்கு கூட முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியாது எனவும் வலியுறுத்தினார்.

இலங்கையின் வரலாற்றில் கடந்தமூன்றுநான்குதசாப்தங்களாக இந்நாட்டின் ஜனாதிபதியாக யார் இருந்தாலும் சரி, யார் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் சரி, அரசாங்கத்தை நடத்துவதற்கு போதிய வருமானம் இல்லை என அவர் நினைவு கூர்ந்தார். வீதிகள், பாலங்கள், அணைகள் கட்டுதல், பேருந்துகள், ரயில்கள் கொள்வனவு செய்தல் போன்ற அனைத்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டன.

இந்த கடனை அடைக்க முடியாமல் மீண்டும் கடனை பெறுவது சிரமமாக உள்ளதாகவும், அரசை நடத்தும் செலவுக்கு வருமானம் இல்லாததால், அவர்கள் பணத்தை அச்சிட்டு அந்த செலவுகளை மேற்கொண்டனர் எனவும்அமைச்சர்சுட்டிக்காட்டினார்.

இப்பிரச்சினைக்குதீர்வுகாணும் வகையில், நிதியமைச்சர் மற்றும் நாட்டின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி, பொருளாதார மாற்ற சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும், அந்தசட்டம் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே ஆட்சிக்கு வரும் எந்தத் தரப்பும் 2 வாரங்களுக்கு மேல் இயங்க முடியும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## வெள்ள.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடை என அனைத்தும் இல்லாமல்போயிருக்கிறது. அதனால்இவர்களுக்காகமுறையானவேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்த வேண்டும். மாவட்ட செயலகங்களுக்கு மேலதிகமாக 10 இலட்சம் ரூபா அனுப்பப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிதி எந்தவகையிலும் போதுமானதாக இல்லை.

சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதொகைமூலம்பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆகாரம் வழங்க முடியாது. ஒரு நேர சாப்பாடுகூட வழங்க முடியாது. அதனால் குறித்த சுற்றறிக்கையை உடனடியாக மாற்றியமைக்கவேண்டும். நிவாரணம் வழங்கும் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு குடும்பத்துக்கு 400 ரூபாஎன்றதொகைஎந்தவகையிலும் போதாது.

அத்துடன் நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் முற்றாக மாற்றப்பட வேண்டும். முறையான அனர்த்த முகாமைத்துவ நிவாரண வேலைத்திட்டத்தை அரசாங்கம் அமைக்க வேண்டும் என்றார்.

## சமையல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிவாயுவின் விலை 60 ரூபாவினாலும், 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 28 ரூபாவினாலும் குறைக்கப்படவுள்ளது.

## மூன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிகள் தனக்குக் கிடைத்துள்ளதாகவும் சபாநாயகர் அறிவித்தார்



காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தலை நடத்தாமலிருக்க வேட்புமனுவை வறிதாக்குவதில் கவனம் செலுத்தவில்லை

## உள்ளூராட்சி, மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவை இரத்து செய்வது குறித்து அவதானம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ள ஆலோசனை தேர்தலை நடத்தாமலிருப்பதற்காக அல்ல. மாறாக வேட்புமனு தாக்கலால் ஏற்பட்டுள்ள சிக்கல்களை தவிர்த்துக் கொள்ளவதற்காகவே இவ்வாறான ஆலோசனை வழங்கப்பட்டது என உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்பர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தாமலிருப்பதற்காக ஜனாதிபதியால் இந்த ஆலோசனை வழங்கப்படவில்லை. வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் நடத்தப்படாமலிருப்பதால் அரச உத்தியோகத்தர்கள் உட்பட பல தரப்பினரும் எதிர்கொண்டுள்ள சிக்கல்கள் மற்றும் அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டே அதனை இரத்து செய்வது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.



வேட்புமனு தாக்கல் செய்துள்ள அரச ஊழியர்கள் தற்காலிக இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் சிலர் உயிரிழந்துள்ளனர். சிலர் கட்சி மாறியுள்ளனர். சிலர் அரசியலிலிருந்தே விலகியுள்ளனர். அது மாத்திரமின்றி ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. இதற்கு சிறந்த உதாரணம்.

அவர் கொழும்பு மாநாகரசபையின் மேயர் வேட்பாளராக வேட்புமனு செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்தார். தற்போது மீண்டும் பதவியேற்றுள்ளார். ஆனால் அவரது வேட்புமனு அவ்வாறே உள்ளது. அதாவது அவர் வேட்பாராளராகவும் உள்ளார். நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

அவ்வாறு இருப்பதற்கு சட்டத்தில் எவ்வித தடையும் இல்லை. ஆனால் அது சம்பிரதாயபூர்வமானதல்ல. இவ்வாறான சிக்கல்களைக் கருத்திற் கொண்டே வேட்புமனுவை இரத்து செய்யுமாறு பல தரப்பினரிடமிருந்தும் எமக்கு கோரிக்கைகள் கிடைத்துள்ளன. எவ்வாறிருப்பினும் தற்போது நீதிமன்றத்தில் 4 வழக்குகள் விசாரணையில் இருப்பதால் வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரை எம்மால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. - என்றார். (05)

# யாழ். மாநகர ஆணையாளருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தள்ளுபடி

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு எதிராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு அறிமுகமான நீதிமன்றங்கள், நியாய சபைகள் மற்றும் நிறுவனங்களை அவமதிக்கும் சட்ட ஏற்பாட்டின் கீழ் நீதிமன்றை அவமதித்தார் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு எதிராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தொடுத்த வழக்கே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், மாநகர ஆணையாளர் சார்பில் கடந்த மாதம் 22ஆம் திகதி முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிறுகோரிக்கை நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சிறுகோரிக்கை நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்ய வேண்டும் என்ற வாதத்தை முன் வைத்திருந்தார்.

அந்நிலையில் குறித்த வழக்கு திங்கட்கிழமை கட்டளைக்காக எடுத்து கொள்ளப்பட்ட போது, வழக்கு உரிய மன்றில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஜனாதிபதி சட்டத்தரணியின் வாதத்தை மன்று ஏற்றுக்கொண்டு, வழக்கை தள்ளுபடி செய்வதாக மாவட்ட நீதிபதி சி.சதீஸ்தரன் கூறி வழக்கை தள்ளுபடி செய்தார். (05)

# சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்ந்த ஒருவர் மஸ்கெலியாவில் கைது

நுவரெலியா, மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வு பணியில் ஈடுபட்ட ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து மாணிக்கக் கல் அகழ்வு பணிக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே பாலிதவின் கருத்துக்கள் திரிவாகியுள்ளன

## ஜானக வக்கும்பர சாடல்

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்த கருத்தினை சில கட்சிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக திரிபுபடுத்தியுள்ளன.

அவை குறிப்பிடுவதைப் போன்று ஜனாதிபதியோ, அரசாங்கமோ தேர்தலை நடத்தாமலிருப்பதற்கு திட்டமிடவில்லை என்று உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்பர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் 2 வருடங்கள் காலத்தை வழங்கினால் சிறந்தது என்றே பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ஒகஸ்ட் வரை நாடாளுமன்றத்துக்கு பதவி காலம் உள்ளது. ஜனாதிபதியால் கலைக்கப்படாவிட்டால் அடுத்த வருடம் வரை நாடாளுமன்றம் இயங்கும்.

இவ்வாண்டு ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் அரசமைப்பில் அவ்வாறே கூறப்பட்டுள்ளது. அதற்கமையவே நாம் செயற்பட வேண்டும். ஜனாதிபதியும் அதனை பல சந்தர்ப்பங்களில் உறுதிபடக் கூறியுள்ளார்.

ஆனால் சில அரசியல் கட்சிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அவர் கூறிய விடயத்தை திரிபுபடுத்தி பெரிதாகக் காண்பிக்கின்றன. தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு ஜனாதிபதி முயற்சிப்பதாகவும் அந்த கட்சிகள் குறிப்பிட்டுள்ளன. ஆனால் ஜனாதிபதியோ அரசாங்கமோ தேர்தலை நடத்தக் கூடாது என்று எண்ணவில்லை. கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் என்ற ரீதியில் அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதியை ஒதுக்கியுள்ளார்.

எனவே, எவரும் தேர்தல் தொடர்பில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. நாம் தேர்தலைக் கண்டு அஞ்சவுமில்லை. அஞ்சுபவர்களே தேர்தலுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். - என்றார். (05)

# யாழில் போதைக்கு அடிமையான மகனை மீட்டுதருமாறு தாய் பொலிஸில் முறையீடு

போதைக்கு அடிமையான மகனை , போதைப்பழக்கத்தில் இருந்து மீட்டு தருமாறு தாயார் கோரியதையடுத்து , இளைஞனை மீட்டு நீதிமன்றின் ஊடாக புனர்வாழ்வு முகாமிற்கு பொலிஸார் அனுப்பி வைத்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பகுதியில் வசிக்கும் தாயொருவர் , தனது மகன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார் எனவும் அவரை அந்தப் பழக்கத்தில் இருந்து மீட்டு தருமாறு மானிப்பாய் பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

அதனை அடுத்து இளைஞனை கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி திங்கட்கிழமை , நீதிமன்றின் ஊடாக Oகந்தக்காடு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். (05)

# விடுதலைப்புலிகள் தமிழர் புனர்வாழ்வு கழகம் உட்பட 15 அமைப்புக்களின் நிதிகள் சொத்துக்கள் முடக்கம்

## வெளியானது வர்த்தமானி

இலங்கை அரசாங்கம் 15 தீவிரவாத அமைப்புகளின் சொத்துக்களை முடக்குவதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில் விசேடவர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல்குணரட்ண இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

15 தீவிரவாத அமைப்புகள் அந்த அமைப்புகளுடன் தொடர்புடைய 210 பேரின் சொத்துக்கள், நிதிகள், பொருளாதார வளங்களை செயல் இழக்கச்செய்வதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு,தமிழர் புனர்வாழ்வு கழகம் தேசிய தவ்ஹீத்ஜமாத் உட்பட பல அமைப்புகளின் நிதிகளும் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன என வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் பயங்கரவாதிகளிற்கு நிதி உதவி செய்ததாகவும் குற்றம்சாட்டப்பட்ட 113 பேரின் பணத்தையும் சொத்துக்களையும் முடக்குவதாகவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது. (05)

# இரத்தினபுரியில் இன்று நடைபெறவிருந்த உலகச் சுற்றாடல் தினம் நிகழ்வு நிறுத்தம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இரத்தினபுரியில் இன்று (புதன்கிழமை) நடைபெறவிருந்த உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய நிகழ்வு அனர்த்த நிலைமை காரணமாக இரத்து செய்யப்பட்டுள்ளது.

சிங்கராஜ வனப்பகுதியின் நுழைவாயில் அமைந்துள்ள இரத்தினபுரி குடாவ பகுதியில் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறவிருந்த நிகழ்வு சீரற்ற காலநிலை காரணமாக அங்கிருந்து ஜனாதிபதி செயலகத்திற்கு மாற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த நிகழ்விற்கு செலவிடப்படும் பணத்தை அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளுக்கும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நட்டஈடு வழங்குவதற்கும் பயன்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் தற்போது நிலவும் வெள்ளம் மற்றும் கடும் மழை காரணமாக இன்று ஜனாதிபதி செயலகத்தின் புதிய மைதானத்தில் விழாவைக் கொண்டாடுவதற்கு சுற்றாடல் அமைச்சு ஏற்பாடுகளைச் செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஐ.நா. நிரந்திர வதிவிட பிரதிநிதிக்கு மலையகம் 200 முத்திரை வழங்கல்

## கிழக்கு ஆளுநர்ள செந்தில் தொண்டமானால்



ஜெனிவாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பெருந்தோட்ட சமூகத்தின் 200 ஆவது வருடத்தின் முதல் நினைவு முத்திரையை தொழில் அமைச்சின் செயலாளருடன் இணைந்து ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலகவிற்கு வழங்கி வைத்தார். (05)

# ஜே.வி.பி. உடன் இணக்கப்பாடு சரிவந்தால் பொது வேட்பாளர் விடயம் கைவிடப்படுமா?

## சிறிரங்கேஸ்வரன் கேள்வி

பொது வேட்பாளர் விடயத்தை முன்னெடுக்கும் குழுவுடன் ஜே.வி.பியினர் சந்திப்பொன்றை நடத்தி, அதில் இரு தரப்பினருக்கு இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டால், பொது வேட்பாளர் விடயம் கைவிடப்படுமா? என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சிக்குள் உட்பூசல் உச்சமடைந்திருந்த சமயத்தில் பொது வேட்பாளர் தொடர்பாக தமிழரசுக் கட்சி தங்களுக்குள் உள்ள தலைமைப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்த பின் தங்களிடம் பேச வரட்டும் என ஏளனமாக கூறிய சுரேஸ் பிரேமச்சந்திரன் தற்போது தமிழரசுக் கட்சி சரியான முடிவை மிக விரைவாக எடுத்து எல்லோருடனும் இணைந்து பயணிப்பதானது தேவையான விடயம் என இரந்து நிற்பதை காணக்கூடியதாக உள்ளது.

ஆயினும், தமிழரசுக் கட்சி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் வந்த பின்னர் தமது முடிவை எடுக்கவுள்ளதாக கூறிவருகின்றது. அதேவேளை பொது வேட்பாளர் என்பது ஒரு விஷப் பரீட்சை என அக்கட்சி தெரிவித்துள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 9 ஆம் திகதி பொது வெளியில் இது தொடர்பாக விவாதிப்பதற்கு அறிவித்தல் ஒன்றையும் விடுத்துள்ளது.



அதில், எவ்வாறான நிலைப்பாட்டை தமிழரசு கட்சியினர் எடுப்பார்கள் என்பதை தெரிந்து கொண்ட சுரேஸ் அணியினர் மிக மிக விரைவாக முடிவெடுக்குமாறு கோரியுள்ளனர்.

அத்துடன், ஜே.வி.பினர் பொது வேட்பாளர் தொடர்பான தரப்பினரை எதிர்வரும் வாரம் சந்திக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இச்சந்திப்பின் போது ஜே.வி.பியினருடன் பொது இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டால் தத்தமது நலன்களுக்காக முகவர்களுக்கு பின்னால் இருந்து இயங்கும் இவர்கள் பொது வேட்பாளர் விடயம் கைவிட்டுவிடுவார்களா? அதன்பின்னர் மக்களுக்கு எதை கூறி மீண்டும் ஒரு நாடகத்தை அரங்கேற்றுவார்கள் ? என மேலும் தெரிவித்திருந்தார். (05)

# காணாமல் போன தாயையும் மகளையும் கண்டுபிடிக்க உதவி கோரும் பொலிஸார்

காணாமல்போன தாயையும் மகளையும் கண்டுபிடிப்பதற்காக கட்டுநாயக்க பொலிஸார் பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

26 வயதுடைய பெண்ணொருவரும் 4 வயதுடைய சிறுமியொருவருமே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் கடந்த மே மாதம் 29 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போன பெண்ணின் கணவர் இது தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த புகைப்படத்தில் உள்ளவர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 071 8591639 அல்லது 011 2252222 என்ற கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (05)

# மகளை கைதுசெய்யசென்ற பொலிஸீக்கு இடையூறு விளைவித்த தாயார் கைதானார்

வர்த்தகர்களுக்குப் போலி காசோலைகளை வழங்கியதாகக் கூறப்படும் பெண் ஒருவரைக் கைதுசெய்யச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடையூறு விளைவித்த தாயார் கைது செய்யப்பட்டுள்ளார் என அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தல், சந்தேக நபருக்குத் தப்பிச் செல்ல உதவி செய்தல், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சீருடைகளை சேதப்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேக நபரின் தாயார் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இவர் அம்பாறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஒரு லட்சம் ஷரூபா இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், இந்த சம்பவத்தின் போது சந்தேக நபரான பெண் தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# இத்தாலியில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக மோசடி

## சந்தேகநபர் கைது

இத்தாலியில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, பேராதனை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இத்தாலியில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி நபரொருவரிடமிருந்து 1,250,000 ஷரூபா பணம் பெற்று மோசடி செய்துள்ளார் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டு கண்டி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(05)

# சீரற்ற காலநிலையால் 26 பேர் உயிரிழப்பு

## 130,021 பேர் பாதிப்பு

சீரற்ற காலநிலையால் 26 பேர் உயிரிழந்துள்ளதுடன், 1,30021 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், மீள் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்கவும் ஜனாதிபதி நிதி ஒதுக்கியுள்ளார் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டில் கடந்த தினங்களில் நிலவிய சீரற்ற காலநிலையால் இதுவரை ( திங்கட்கிழமை ) 23 மாவட்டங்களில் உள்ள 33 ஆயிரத்து 622 குடும்பங்களை சேர்ந்த 130,021 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட திடீர் விபத்துக்களால் 26 பேர் உயிரிழந்துள்ளதுடன், 41 பேர் காயமடைந்துள்ளனர்.

மண்சரிவு மற்றும் வெள்ள அபாயத்தை கருத்திற் கொண்டு 116 தற்காலிக பாதுகாப்பு மத்திய முகாம்களில் 2,369 குடும்பங்களைச் சேர்ந்த 9248 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தேவையான வசதிகள் பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு முப்படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இயற்கை அனர்த்தத்தை முகாமைத்துவம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை தொடர்பில் கடந்த வாரம் திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சின் ஊடாக பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன.

அனர்த்தங்கள் தொடர்பில் அறிய தருமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் 117 என்ற விசேட தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரதேச செயலக பிரிவுகள் முன்வைக்கும் யோசனைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எதற்கும் எதிர்ப்பு தெரிவிப்பது தற்போது வழமையாகி விட்டது. மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அசாதாரன சூழ்நிலையின் போது மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு போதுமான நிவாரணம் வழங்க ஜனாதிபதி நிதி ஒதுக்கியுள்ளார். - என்றார். (05)

# தோட்ட அதிகாரியின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

## நானுஓயாவில் சம்பவம்

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா பிரிவு தோட்ட தொழிலாளர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு கீழ் இயங்கும் தலவாக்கலை நானுஓயா தோட்ட பிரிவில் ஓய்வு பெற்ற தொழிலாளர் ஒருவரை திங்கட்கிழமை மீண்டும் பணிக்கு சமுகமளிக்க வேண்டும் என தோட்ட அதிகாரி கூறியுள்ளார். அதனை மறுத்த தொழிலாளரை தகாத வார்த்தைகளால் தரக்குறைவாக பேசி அவரை தாக்க முற்பட்டுள்ளார். இதனால் தோட்ட மக்களுக்கும் தோட்ட நிர்வாகத்திற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த முரண்பாட்டுக்கு எதிராகவும், தோட்டத்தில் ஓய்வு பெற்ற தொழிலாளியை தரம் குறைவாக பேசி தாக்க முற்பட்டற்கும் எதிராகவும், மேலதிக நேரம் தொழில் செய்தாலும் உரிய கொடுப்பனவு வழங்காததிற்கும், எதிர்ப்பு தெரிவித்தும் வேலை நாள்கள் குறைக்கப்படுவதற்கும் தோட்டத்தில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு எவ்வித சலுகைகளும் வழங்காதற்கும், சிறிய தவறு செய்தாலும் கடுமையாக எச்சரிப்பதற்கும் எதிர்ப்பு தெரிவித்து தொழிலாளர்கள் இந்த பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.06.2024இல் வெளியிடப்பெற்றது